# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 10 | JANUARY 2026 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE







## SOURASHTRA CHAMBER OF COMMERCE

# 19th ANNIVERSARY

*Celebration*

**Date: 26.01.2026 / Monday** **Time: 06.00PM**

**Venue: Arunachalam Kamalambal A/C Hall,** Kamarajar Salai, Madurai-9

*Welcome our members with family*


அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


GSTIN: 33ALZPD4776G1ZO
மல்லிகை
The Mart
GROCERY / TOYS / STATIONERY / GIFTS
Online Delivery : 9345910000
No. 198-A, South Masi Street, Madurai - 625001.


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 19வது ஆண்டு விழா வருகின்ற 26.01.2026 (திங்கள்) அன்று மாலை 6 மணிக்கு அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் நடைபெற இருக்கிறது. முன்னணி சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொள்ள இருக்கின்றனர். சாதனையாளர்களுக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது. நமது அங்கத்தினர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் சிட்கான் தொழில் வர்த்தக மாநாடு மற்றும் கண்காட்சி இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கிறது. துணைத் தலைவர் பொறுப்பில் இருப்பவர் சிட்கான் மாநாடு தலைமை பொறுப்பேற்று வருவது வழக்கம். அதனடிப்படையில், சேம்பர் துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்களை செயற்குழு அனைவரின் சம்மதத்துடன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது. மாநாடு வெற்றிகரமாக நடைபெற சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்புடன் செயல்படுவோம் என்பதை உறுதி கூறினார்கள். விளம்பரதாரர்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும். ஸ்டால் அமைப்பாளர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய நல்ல ஒரு தளமாக இருக்கும் இந்த மாநாட்டுக் கண்காட்சியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஸௌராஷ்ட்ர அரசியல் எழுச்சி மாநாடு 2025 கடந்த டிசம்பர் மாதம் 28ம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது. அரசியல் தலைவர்கள், பிரிதிநிதிகள், சமூக முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் திரளாக கலந்து கொண்டனர். மாநாட்டில் சமூக கோரிக்கைகள் அடங்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அரசியலில் அங்கீகாரம் பெறுவதற்கு சமூக மக்களின் ஆர்வத்தைக் காண முடிந்தது. இந்த நிகழ்வில் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பங்களிப்பும் இருந்தது. சேம்பர் சார்பாக உணவு ஏற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு அவர்களின் பொறுப்பில், அவர்தம் குழுவினருடன் சிறப்பாக செயல்பட்டதற்கு அரசியல் எழுச்சி மாநாட்டுக் குழு நன்றி தெரிவித்துக்கொண்டது. இது சேம்பர்-க்கு கிடைத்த வெகுமதி.

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள். மற்றும் குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.


## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**13.12.2026** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், சிறப்பு அழைப்பாளருமான திரு. T.J. ஷண்முகலால் அவர்களின் மறைவுக்கு சேம்பர் வருந்துகிறது. சேம்பர் சார்பாக இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**01.01.2026** – சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் 2026 ஆங்கிலப்புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**04.01.2026** – சேம்பர்-ன் 8வது செயற்குழு கூட்டம் கொல்லிமலையில் நடைபெற்றது. இதில், சிட்கான் 2026 மாநாட்டுத் தலைவர் தேர்வு நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**06.01.2026** – ஆண்டின் முதல் தொழில் வர்த்தகக் கூட்டம் சேம்பர் வளாகத்தில் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. தொழிலில் உச்சம் தொட... தொலைநோக்குப் பார்வையும், திட்டமிடுதலும் என்கிற தலைப்பில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. S.P. அரவிந்த் Executive Director, Solamalai Group அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

**26.01.2026** அன்று காலை சரியாக 8.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் பாரத தேசத்தில் 76வது குடியரசு தின விழா கொண்டாட இருக்கிறது. சேம்பர் அங்கத்தினர்கள் அனைவரும் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

அதோடு, அன்றைய தினம் மாலை 6 மணிக்கு சேம்பர்-ன் 19வது ஆண்டு விழா அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் நடைபெற இருக்கிறது. அங்கத்தினர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொள்ள சேம்பர் சார்பாக அழைக்கிறோம்.

நன்றி.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

அங்கத்தினர்கள் அனைவருக்கம், இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள். தைப் பிறந்தாள் வழி பிறக்கும் என்பது போல, அனைவரது வாழ்விலும் வசந்தம் வீச, தொழில் மேன்மை அடைய இதழ் குழு சார்பாக வாழ்த்துகிறேன்.

சென்ற மாத லாப் ஸமாச்சார் இதழ், எஸ்.வி.எஸ். ஃபுட்ஸ் நிறுவனத்தார் திரு. எஸ்.வி. வேல்சங்கர் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. அவருடன் நடைபெற்ற உரையாடல் மகிழ்ச்சியளிக்கிறது.

ஸௌராஷ்ட்ர அரசியல் மாநாடு கடந்த 28.12.2025 வெகு சிறப்பாக நடைபெற்றது. சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் அம்மாநாட்டின் தலைவராக சிறப்பாக வழிநடத்திச் சென்றார். நமது கோரிக்கைகள் அவசியம் அரசியல் கட்சிகள் அங்கீகரிக்க வேண்டும். அதுவே இந்த மாநாடு வெற்றிக்கு அடையாளம்.

சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. T.J. ஷண்முகலால் அவர்கள் மறைவு மிகுந்த வருத்தமளிக்கிறது. அவர், லாப் ஸமாச்சார் இதழின் தபால் சேவை சார்ந்த குறைகளுக்கு மிகுந்த உதவியாக இருந்தார். அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

சமீபத்தில் நடந்த செயற்குழு கூட்டத்தில், சிட்கான் 2026 மாநாட்டின் தலைவராக, சேம்பர் துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். அவரது தலைமையில், மாநாடு வெற்றி பெற இதழ் குழு வாழ்த்துகிறது.

அனைவருக்கும் இனிய குடியரசு தின நல்வாழ்த்துக்கள். சேம்பர்-ன் 19வது ஆண்டு விழாவிற்கு அனைவரும் குடும்பத்துடன் வருகை தர அழைக்கிறேன்.

### திருக்குறள்

**முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்**
**சார்பிலார்க்கு இல்லை நிலை.**

**பொருள்:** (பெரியவர்களுடைய ஆதரவு வியாபாரிக்கு மூலதனம் போலவும், குழந்தைக்கு தாயின் அணைப்பு போலவும் உதவும்). மூலதனம் இல்லாத வியாபாரிக்கு இலாபம் இல்லை. குழந்தை அணைத்து ஆறுதல் செய்து அறிவு சொல்லும் போன்ற பெரியவர்களுடைய ஆதரவில்லாதவர்களுக்கு நல்ல நிலைமை இருக்காது.

அதிகாரம் 45 பெரியாரைத் துணைக்கோடல் அரசியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

| | |
|---|---|
| Name | : Sourashtra Chamber of Commerce |
| Bank | : State Bank of India |
| Acct. No. | : 30134805614 |
| Branch | : Madurai City |
| IFSC | : SBIN0011544 |

SCAN & PAY




*Best Compliments*

# BVK GROUP



**Bala V Kutti**
Founder & Chairman

## Indus Finance Ltd
## Indowind Energy Ltd
## EverOn Power Ltd
## BeKae Properties P Ltd
## BVK Foundation

4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.

Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

# மாதாந்திர தொழில் வர்த்தகக் கூட்டம்



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம் இந்த மாதம் 6ம் தேதி சேம்பர் வளாகத்தில் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

தொழிலில் உச்சம் தொட... தொலைநோக்கு பார்வையும், திட்டமிடுதலும் என்கிற தலைப்பில் நடைபெற்ற கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக, திரு. S.P. அரவிந்த், Executive Director, Solamalai Group அவர்கள் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சி சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சேம்பர் நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் Dr. T.S.J. விஷால் அவர்கள் சிறப்பு விருந்தினரை மிக அழகாக கூட்டத்திற்கு அறிமுகம் செய்தார்.

திரு. S.P. அரவிந்த் அவர்கள் தனது உரையில், தமது நிறுவனங்களைப் பற்றி சுருக்கமாக விவரித்தார். தொடர்ந்து, பேசுகையில், தொழிலை அடுத்தத் தலைமுறைகளுக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான காரணிகள் பற்றி மிக அழகாக விவரித்தார். தொழில்களை கையாளும் முறை, நிதித் திட்டமிடல், பிராண்டிங் போன்றவற்றில் கவனம் செலுத்துவதன் அவசியம் குறித்துப் பேசினார். அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கும் பதிலளித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினருக்கு சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை இனிய இரவு உணவு விருந்து வழங்கப்பட்டது.

# சேம்பர் செயற்குழு கூட்டத்தில் சிட்கான்'26 சேர்மன் அறிவிப்பு



கடந்த 04.01.2026 அன்று மாலை 5 மணிக்கு கொல்லிமலையில் சேம்பர்-ன் 8வது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், இந்த ஆண்டு 8வது முறையாக நடைபெற இருக்கும் சிட்கான் தொழில் வர்த்தக மாநாட்டின் தலைவர் பொறுப்பை, சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் மாநாட்டுத் அறித்தார். அதன்படி துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரின் ஒப்புதலுடன் பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்றனர். முன்னாள் தலைவர்கள் 8வது சிட்கான் மாநாட்டுத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்களை கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து ஏற்புரையை வழங்கினார்.



சேம்பர்-ன் டிசம்பர் மாத லாப் ஸமாச்சார் வணிக இதழ், எஸ்.வி.எஸ். புட்ஸ் நிறுவனத்தில் உரிமையாளர் திரு. எஸ்.வி. வேல் சங்கர் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த சந்தப்பில், லாப் ஸமாச்சார் குழுவினர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# சிபில் ஸ்கோர்

தனிநபர்களின் நிதிநிலையை கணக்கிடும் சிபில் ஸ்கோர் பற்றி பல்வேறு கட்டுக்கதைகள் இன்னமும் நம்பப்படுகிறது. ஆனால், அதில் பல விவரங்கள் உண்மையில்லை என்றே கூறப்படுகிறது.

சிபில் ஸ்கோரை ஒருவர் சோதித்தாலே, அது குறைந்துவிடும், குறைந்த வருவாய் இருந்தால் சிபில் ஸ்கோர் குறையும் என்றெல்லாம் இதுவரை கட்டுக்கதைகள் சொல்லப்பட்டு வந்துள்ளன. இதுநாள்வரை நாமும் நம்பிக்கோண்டிருக்கிறோம்.

சிபில் ஸ்கோர் என்பது மூன்று இலக்க எண்களைக் கொண்டது. இது பெரும்பாலும் 300 முதல் 900 வரை இருக்கும். கடந்த கால நிதி நிர்வாகத்தை அடிப்படையாக வைத்து ஒருவரது சிபில் ஸ்கோர் அமையும். ஒரு கடனை அல்லது கடன் அட்டையை வழங்குவதற்கு முன்பு, வங்கி மற்று நிதி நிறுவனங்கள் இந்த சிபில் ஸ்கோரைப் பார்த்துதான் ஒருவருக்கு கடன் வழங்கலாமா என்பதை உறுதி செய்கின்றன.

சிபில் ஸ்கோருக்கு ஏற்ற வட்டியா?

நல்ல சிபில் ஸ்கோர் என்பது 650 அல்லது அதற்கும் மேல் இருக்க வேண்டும். இந்த சிபில் ஸ்கோர் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டியை நிதி நிறுவனங்கள் தீர்மானிக்கின்றன. அது மட்டுமல்ல, சிபில் ஸ்கோர் அடிப்படையில் கடனுக்கான செயல்பாட்டுக் காலம் விரைவாக நடக்கும். சிலருக்கு சிபில் ஸ்கோர் குறைவாக இருக்கும்பட்சத்தில் அவருக்கு அதிக வட்டியில் கடன் வழங்க நிதி நிறுவனங்கள் முன்வருவதும் உண்டு.

தனிநபர்கள் தங்கள் சிபில் ஸ்கோர்களை சோதிக்கலாம்

தனிநபர்கள் தங்களது சிபில் ஸ்கோர்களை அவ்வப்போது சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம். அது எந்த வகையிலும் தனிநபர் நிதிநிலை வரலாற்றில் தாக்கத்தை ஏற்படுத்தாது. கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் சிபில் ஸ்கோரை சோதிப்பது மட்டுமே நிதி வரலாற்றில் பதிவாகும். ஒருவரின் சிபில் ஸ்கோரை நிதி நிறுவனங்கள் அவ்வப்போது சோதிக்கின்றன என்றால், அவர் அத்தனை கடன் விண்ணப்பங்களை அளித்திருக்கிறார் என்பதும் பதிவாகும். அதன் தாக்கத்தால், அவரது சிபில் ஸ்கோர் பாதிக்கப்படும் என்பது உண்மை. ஆனால் தனி நபர்கள் அவ்வப்போது சிபில் ஸ்கோரை பார்த்து சோதித்து அவை நல்ல நிலையில் இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்வது நல்ல வழக்கம்தான் தவறில்லை.

செயலி மூலம் வாங்கும் சிறு கடன்கள்

தனிநபர்கள் தங்களது செல்போனில் பதிவிறக்கம் செய்யும் செயலிகள் மூலம் வாங்கும் சிறு கடன்கள், சிபில் ஸ்கோரில் இடம்பெறாது என்று கருதுகிறார்கள், அது தவறு. இப்போது வாங்கிவிட்டு பிறகு செலுத்தலாம் என்பது போன்ற பிஎன்பிஎல் என்ற சிறு கடன்கள்கூட ஒருவரது கடன் வரலாற்றில் பதிவாகும். இது சிபில் ஸ்கோரை வெகுவாக பாதிக்கும். மிக எளிதாக கடன் கிடைக்கும் என்பதை மனதில் நினைக்கும்போது, இது சிபில் ஸ்கோரில் எதிரொலிக்கும் என்பதையும் கவனத்தில் கொள்க.

கடனை முன்கூட்டியே முடித்தால்

நிறைய கடன் இருப்பது சிபில் ஸ்கோரை பாதிக்காது. அதிக கடன் அட்டைகள் வைத்திருந்தாலும் பிரச்னை இல்லை. மிகப் பழைய கிரெடிட் கார்டு, அதில் தவறாத தவணைகள்தான் சிபில் ஸ்கோரை உயர்த்தும். ஒருவேளை, கிரெடிட் கார்டு கடனை எல்லாம் அடைத்துவிட்டு கிரெடிட் கார்டை திரும்ப வழங்கினால் அப்போதும் சிபில் ஸ்கோர் குறையலாம். எனவே, பழைய கிரெடி கார்டுகளை வைத்துக் கொண்டு அதில் கடன் தவணைகளை முறையாக செலுத்துவதே நல்லது.

குறைந்த வருவாய் இருந்தால் சிபில் ஸ்கோர் குறையுமா?

குறைந்த வருவாய் இருப்பவர்களுக்கு சிபில் ஸ்கோர் குறைவாக இருக்கும் என்று பலரும் நினைத்திருக்கிறார்கள். ஆனால், அதிக வருவாய் இருந்தால் அதிக கடன் தொகையை திரும்ப செலுத்த முடியும் அவ்வளவுதான். ஆனால், சிபில் ஸ்கோர் என்பது முழுக்க முழுக்க வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதை அடிப்படையாக வைத்தது. எந்த வகையிலும் ஒருவரது மாத வருவாய் சிபில் ஸ்கோரில் கணக்கிடப்படாது.

ஒருவேளை அதிக வருவாய் இருப்பவர்கள், இதுவரை எந்தக் கடனும் வாங்கவில்லை என்றால் அவர்களுக்கு சிபில் ஸ்கோர் பூஜ்யமாகக்கூட இருக்கலாம். அதுபோல அதிக வருவாய் இருந்தும், கடன் தவணைகள் தவறினால் அதனால் சிபில் ஸ்கோர் குறையலாம்.

கடன் தொகை உச்ச வரம்பு அதிகரித்தால்?

முறையாக தவணைகளை செலுத்துபவர்களின் கடன் தொகை உச்ச வரம்பு அதிகரிப்பது நல்ல அறிகுறிதான். நிதி நிறுவனங்களுக்கு ஏற்படும் நம்பிக்கையே உச்ச வரம்பு அதிகரிக்கக் காரணம், ஒருவரது கடன் தொகை உச்ச வரம்பு அதிகரித்தாலும் கடன் தொகையை அதிகரிக்காமல் வைத்திருப்பது பாதுகாப்பானது. உச்ச வரம்பை தொடாமல் வைத்திருப்பதும் சிபில் ஸ்கோரை உறுதியாக்கும்.

உடனடியாக சிபில் ஸ்கோரை உயர்த்த முடியுமா?

கடன் தவணைகள் மற்றும் கிரெடிட் கார்டு தவணைகளை சரியாக உரிய காலத்துக்குள் செலுத்தினால் சிபில் ஸ்கோர் உயரும். இதனை உடனடியாக செய்ய முடியாது. ஆனால், உடனடியாக சிபில் ஸ்கோர் குறையாமல் பார்த்துக் கொள்ள முடியும். அதாவது கடன் கேட்டு ஒருவர் அதிக முறை விண்ணப்பிப்பதால் சிபில் ஸ்கோர் குறையலாம். எனவே, அவ்வாறு செய்வதைத் தவிர்த்தால் குறைவதையும் தடுக்கலாம்.

கடன் வாங்கினால்தான் சிபில் ஸ்கோர் உயரும்

ஒருவர் இதுவரை எந்தக் கடனும் வாங்கவில்லை. அவருக்கு சிபில் ஸ்கோர் உயர்வாக இருக்குமா என்றால், கடன் வாங்காமலே இருப்பவர்களுக்கு சிபில் ஸ்கோர் இருக்காது என்பதே உண்மை. கடன் வாங்கினால்தான் சிபில் ஸ்கோர் உருவாகும். கடன் தவணையை முறையாக செலுத்தும்போது சிபில் ஸ்கோர் அதிகரிக்கத் தொடங்கும். அவசியத் தேவைக்காக கடன் வாங்குவது நல்லதுதான். அதனை முறையாக செலுத்தும் வழிகளை அறிந்துகொண்டு உரிய நிதி திட்டமிடலுடன் கடன் வாங்கலாம். ஒரு பொருளை மொத்தமாக தொகை கொடுத்து வாங்க முடியாமல் இருக்கும்போது, சிறு தவணைகளாக செலுத்தும் வாய்ப்புடன் அதனை வாங்கி பயன்படுத்துவதும், கடனை விரைவில் அடைப்பதும் நல்லதுதான்.

எனவே, இதுபோன்ற நிதிநிலை தொடர்பான தவறான எண்ணங்களை கைவிட்டு, எந்தத் தகவலையும் உறுதி செய்து கொள்வது நல்லது. மேலும், செயற்கை நுண்ணறிவு காலம் இது. இதில் எந்த தகவல் வேண்டுமானாலும் உண்மை போன்றே படங்கள் மற்றும் விடியோக்கள் மூலம் பரப்பப்படலாம். எதையும் உறுதி செய்துகொள்ள வேண்டியதும் தனிநபர் பொறுப்புதான்.

# ஸ்பிரீ திட்ட காலம் நீட்டிப்பு

சமீபத்தில், ஊழியர் மாநில காப்பீட்டுக் கழகம் ( SPREE ), ஜூலை 1 முதல் டிசம்பர் 31, 2025 வரை SPREE திட்டத்தை மீண்டும் தொடங்க ஒப்புதல் அளித்தது.

**SPREE** திட்டம் முதலாளிகள் / பணியாளர்களின் பதிவை மேம்படுத்துவதற்கான திட்டம் (SPREE) முதலில் 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறிக்கோள்: நாடு முழுவதும் ESI பாதுகாப்பை விரிவுபடுத்துவதே இதன் நோக்கம். இந்தத் திட்டம் 88,000க்கும் மேற்பட்ட முதலாளிகளையும் 1.02 கோடி ஊழியர்களையும் பதிவு செய்வதற்கு வெற்றிகரமாக உதவியது.

புதுப்பிக்கப்பட்ட SPREE ஜூலை 1 முதல் டிசம்பர் 31, 2025 வரை திறந்திருக்கும், பதிவு செய்யப்படாத முதலாளிகள் மற்றும் ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள் உட்பட பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் ESI சட்டத்தின் கீழ் சேர ஒரு முறை வாய்ப்பை வழங்குகிறது. தற்போது இதனை புதுப்பிக்க, 31 ஜனவரி 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. நமது சேம்பர்-ல் உள்ள தொழில்முனைவோர்களை இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்தக் காலகட்டத்தில் பதிவு செய்யும் முதலாளிகள் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து அல்லது அவர்களால் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து காப்பீடு செய்யப்பட்டதாகக் கருதப்படுவார்கள். அதே நேரத்தில் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் அந்தந்த பதிவு தேதிகளிலிருந்து காப்பீடு செய்யப்படுவார்கள்.

தண்டனையை விட தன்னார்வ இணக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்தத் திட்டம் வழக்குச் சுமையைக் குறைக்கவும், முறையான பதிவை ஊக்குவிக்கவும், பங்குதாரர்களிடையே மேம்பட்ட ஈடுபாட்டையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கவும் முயல்கிறது.

## PF Withdrawal - New Rules

| Purpose | Withdrawal Limit & Eligibility | Frequency |
|---|---|---|
| **Category I – Essential Social Security Needs** | | |
| Illness (self & family) | Up to 100% of eligible balance after 12 months service | Max 3 times per FY |
| Education (self & family) | Up to 100% of eligible balance after 12 months service | Max 10 times during membership |
| Marriage (self & family) | Up to 100% of eligible balance after 12 months service | Max 5 times during membership |
| **Category II – Housing Related Needs** | | |
| Purchase / Construction / Home Loan / Renovation | Up to 100% of eligible balance after 12 months service | Max 5 times during membership |
| **Category III – Special Circumstances** | | |
| Special circumstances (without assigning any reason) | Up to 100% of eligible balance after 12 months service | Max 2 times per FY |
| Would you like me to find out more details about the Employee Provident Fund (EPF) withdrawal process? | | |

MCA Expands *Definition of*

# Small Company

## Updated Thresholds Announced

The Ministry of Corporate Affairs (MCA) has amended the definition of a Small Company under Section 2(85) of the Companies Act, 2013. The revised limits significantly increase the number of companies eligible for relaxed compliance.

**Revised Definition of Small Company**

A private company (other than holding, subsidiary, Section 8 companies, or those governed under special Acts) will now be treated as a Small Company if it meets both the following limits:

**Paid-up Share Capital:**
**Earlier Limit:** Up to Rs.4 crore
**New Limit:** Up to Rs.10 crore
**Turnover:**
**Earlier Limit:** Up to Rs.40 crore
**New Limit:** Up to Rs.100 crore

This amendment allows more MSMEs and growing businesses to benefit from simplified corporate compliance.

**Key Benefits of Small Company Status**

- Simplified annual return in Form MGT 7A
- No cash flow statement required in financials
- Lower penalties for non-compliance
- Only two board meetings per year
- Reduced reporting and documentation requirements
- Exemption from Applicability of CARO
- Exemption from reporting on adequacy of internal financial controls and its operating effectiveness in auditor's report
- Rotation of Director is Not Mandatory.

**Who Is Excluded?**

Even if the following companies meet financial limits, they cannot be classified as small companies:

- Public companies
- Holding or subsidiary companies
- Section 8 companies
- Companies governed by special Acts

**Takeaway:**

The expanded limits align with India's ease-of-doing-business reforms and reduce the compliance burden for a large segment of private companies. Businesses should reassess their eligibility and update their compliance framework accordingly.



## இரங்கல்

நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், குருவாயூரப்பன் கெமிக்கல்ஸ் உரிமையாளருமான திரு. T.J. சண்முகலால் அவர்கள் கடந்த 13.12.2025 அன்று காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவர் நமது சேம்பர் சிறப்பு அழைப்பாளராக இணைந்து சேவை செய்தவர். அவரது பிரிவால் வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

# GSTN Issues 4 Advisories in December 2025 to Clarify Key Compliance Procedures

Common portal of GST under the GST law, GSTN keeps on issuing advisories on new functions / updates on the portal for upgradation of functionalities and new options or functions enabled for implementation by taxpayers. During the month of December, 2025, the following Advisories have been issued so far in relation to the various compliances by GSTN: The gist of these Advisories is summarized hereunder for easy understanding:

**GSTN Advisory on Reporting Values in Table 3.2 of GSTR-3B**

GSTN has issued an Advisory on Reporting Values in Table 3.2 of GSTR-3B. Accordingly,

- Table 3.2 of Form GSTR-3B relating to inter-state supplies made to unregistered persons, composition taxpayers, and UIN holders will be made non-editable effective from November 2025 tax period onwards. These figures will be auto-populated in Table 3.2, which is out of the total supplies declared in Table 3.1 & 3.1.1 of GSTR-3B, from the corresponding details declared in GSTR-1/1A/IFF in the requisite tables.
- In case any modification/amendment is required in the auto-populated values of Table 3.2 of GSTR-3B, taxpayers have 2 options:

a) Either make modification/amendment through filing GSTR-1A for the same tax period, which changes the auto-populated values of table 3.2 in GSTR-3B instantly and the GSTR-3B can be filed with the updated values, or

b) The amendment of such supplies can always be reported in Form GSTR-1/IFF filed for subsequent tax.

- It is also advised to the taxpayers to review the draft GSTR-1/1A/IFF thoroughly before filing so that any mistakes in the statement can be corrected therein. This will ensure that the accurate values are auto-populated in Table 3.2 of GSTR-3B.
- Form GSTR-1A can be filed any time after filing GSTR-1 and up to the moment of filing GSTR-3B. Therefore, any amendments required in the auto-populated values of Table 3.2 can be made through GSTR-1A until GSTR-3B is filed.

**GSTN Advisory on Auto Suspension of GST Registration**

GSTN has issued an advisory on auto suspension of GST registration due to Non-Furnishing of Bank Account details as per Rule 10A within 30 days of grant of registration or before filing details of outward supplies in GSTR-1 or IFF, whichever is earlier. Accordingly,

- Automatic Suspension on failing to furnish bank account details within 30 days of registration, the system will automatically suspend the registration. The suspension order can be viewed at: Services > User Services > View Notices and Orders.
- How to add Bank Account Details – Taxpayers can add bank account details through a non-core amendment by navigating to: Services > Registration > Amendment of Registration (Non-Core Fields).
- Once bank account details are furnished, cancellation proceedings will be automatically dropped by the system.
- If the cancellation proceedings are not dropped automatically on the same day after adding bank details, the taxpayer can manually initiate the process using the “Initiate Drop Proceedings” button available at: Services > User Services > View Notices and Orders > Initiate Drop Proceedings.
- For exemption, furnishing bank account details is not mandatory for OIDAR and NRTP taxpayers. However, for OIDAR taxpayers who select “Representative Appointed in India” as ‘Yes’, furnishing bank account details is mandatory.

**GSTN Advisory on Credit Note Handling in Invoice Management System (IMS):**

- GSTN has rolled out an Smarter Credit Note Handling functioning by upgrading to the Invoice Management System (IMS) on the GST portal, introducing greater flexibility and accuracy in the handling of credit notes and Input Tax Credit (ITC).
- This update addresses long-standing compliance challenges faced by taxpayers where automatic ITC reversals occurred even in cases where credit was never availed or had already been reversed.
- Accordingly, recipients of credit notes will now be required to explicitly confirm whether the acceptance of a credit note should result in a reduction of ITC. Earlier, acceptance of a credit note would often trigger an automatic ITC reversal, irrespective of the actual credit position of the recipient.
- The revised system will now allow taxpayers to exercise an informed choice at the time of acceptance.
- While accepting a credit note on the IMS dashboard, taxpayers can now select one of the following options: Yes or No

a) If the taxpayer selects “Yes”, the ITC will be reduced. This option is intended for situations where eligible ITC was availed earlier and needs to be reversed in line with the credit note.

b) If the taxpayer selects “No”, the ITC will remain unchanged. This option is particularly useful where ITC has already been reversed in earlier periods or where ITC was never availed in the first place.

- This flexibility ensures that ITC reversals reflect actual credit utilisation rather than system-driven assumptions.

**Advisory & FAQs on Electronic Credit Reversal and Re-claimed Statement & RCM Liability/ITC Statement.**

GSTN has issued an Advisory and FAQs on Electronic Credit Reversal and Re-claimed Statement & RCM Liability/ITC Statement.

- Electronic credit reversal and re-claimed statement (re-claim ledger) can be viewed by the taxpayerby navigating to the Dashboard › Services › Ledger › Electronic Credit Reversal and Re-claimed.
- RCM Liability/ITC Statement can be accessed through: Services >> Ledger >> RCM Liability/ITC Statement.
- GSTN has advised that shortly, negative values or availment of excess ITC over and above available balance, shall not be allowed in both the ledgers. Both the statements shall have following validation for regulation of ITC:

a) The reclaimed ITC in Table 4(D)(1) shall be lesser than or equal to the combined values of closing balance of Electronic Credit Reversal and Re-claimed Statement and ITC being reversed in Table 4(B)(2) of current period GSTR-3B. and,

b) The RCM ITC claimed in Table 4(A)2 & 4(A)3 shall be equal to or less than the combined values of RCM liabilities paid in Table 3.1(d) of the same GSTR-3B and closing balance of RCM Liability/ITC Statement.

